1970 ஆகஸ்ட் 28]

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்பொழுது கொடுக்கப் படும் டி.ஏ. (T.A.) இடி.ஏ.(D.A.) எந்த ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டது? அப்பொழுது இருந்த விலைவாசி என்ன? இப் பொழுதிருக்கும் விலைவாசி என்ன? இப்பொதைய விலை வாசிக் கேற்ற அளவில் டி.ஏ., (T.A.) டி.ஏ. (D.A.)க்களை உயர்த்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு விலைவாசியையொட்டி, அவர்கள் திருப்திப்படும் அள வுக்கு இந்த ஆண்டு உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உயர்த் திக்கொடுக்கப்பட்டது மட்டுமல்லாமல், வந்ததற்குப் பிறகு எழுதிப் பெறவேண்டிய நிலை இல்லாமல், முன்கூட்டியே கல்வித்துறை இயக்குநர் அவர்கள் தொகையை வாங்கி வைத்துக்கொண்டு அவர் களுக்கு முன்கூட்டியே தரலாம் என்று ஏற்பாடு செய்து, அவர் களுக்கு அந்தக் கஷ்டம் இல்லாத அளவு இந்த ஆண்டு பார்த்துக் கொள்ளப்பட்டதால் இந்த ஆண்டு அப்படிப்பட்ட குறை ஏதும் வரவில்லை.

நீலகிரி மாவட்ட ஒய்வு பெற்ற ஆசிரியர்கள் சங்கக் கோரிக்கை

* 86 வினு.—திரு. கே. போஜன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சங்கத்தி லிருந்து 2—4—1969 தேதியிட்ட கோரிக்கை விண்ணப்பம் ஒன்று வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், இதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) முறையீட்டில் அடங்கியிருந்த வேண்டுகோள்கள் பொதுத் தன்மை வாய்ந்தவையாக இருந்ததாலும், அவை அரசினல் ஏற்கனவே ஆலோசிக்கப்பட்டிருந்தபடியாலும் அவை குறித்து தனித்தனியாகத் திட்டவட்டமான நடவடிக்கை ஏதுவும் எடுக்கப்பட வில்லை.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கத்தில், ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஓய்வு ஊதியத்தை இருபது ரூபாயிலிருந்து முப்பது ரூபாயாக உயர்த்தவேண்டும் என்று தீர்மானித்திருந்தார்கள். சர்க்கார் ஊழியர்களுக்கு முப்பது ரூபாய் அளவுக்கு உயர்த்தப் பட்டதேயொழிய ஆசிரியர்களுக்கு அந்த உயர்வு அளிக்கப்பட வில்லை. இருபது ரூபாய்தான் ஓய்வு ஊதியமாகக் கிடைக்கிறது என்கிற குறை அவர்களுக்கு இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும், ஏனைய சர்க்கார் ஊழியர் களுக்கு அளிக்கப்படும் இந்தச் சலுகையைக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு, மற்றவர்களுக்குக் கொடுப்பதைப் போல் பென்ஷனை முப்பது ரூபாய் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை இப்பொழுது பரிசீலனையில் இருந்துவருகிறது. இது நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்து மட்டுமல்லாமல், மாநிலம் முழுவதிலும் இருக்கும் பிரச்னையாக இருப்பதால் அது பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவில் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கம் கொடுத்த விண்ணப்பத்தில் உள்ள கோரிக்கைகள் என்னென்ன என்பதை அமைச்சரவர்கள் விவரிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சங்கம் பல கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். பிராவிடெண்ட் பண்டு முறையை விரைவில் அகற்றவேண்டுமென்றும், பென்ஷன் தொகையை இருபது ரூபாயிலிருந்து நாற்பது ரூபாய் அளவுக்கு உயர்த்த வேண்டுமென்றும், பென்ஷனை எல்லா ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் பத்து சதவீதம் உயர்த்தவேண்டுமென்றும், அவர்களுக்கு ஹில் அலவன்ஸ் பத்து ரூபாய் தரவேண்டும் என்றும், மருத்துவ வசதி பிற மாவட்டத்தினருக்குக் கொடுப்பது போன்று தங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், எஜுகேஷனல் கன்ஸெஷன்ஸ் மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போல் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுடைய பிள்ளைகளுக்கும் தரவேண்டும் என்றும், 1964-ம் ஆண்டுக்குப் பிறகு ரிடையர் ஆனவர்களுக்குத் தரப்படும் சலுகைகள் அதற்கு முன்பு ரிடையர் ஆன ஆசிரியர்களுக்கும் தரவேண்டும் என்றும் அந்த முறையீட்டில் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். குடும்பப் பென்ஷன் திட்டம் அவர்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும் என்று இப்படிப் பொதுவான கோரிக்கைகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். இவை எல்லா ஆசிரியர்களைப் பொறுத்தும் பரிசிலிக்கப்படவேண்டியிருப்பதால், பல்வேறு பிரச்சினைகள் வரும்போது இவையும் கவனிக்கப்படும்.

திரு. நா. கிருட்டிணன் : தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியத்தை இருபது ரூபாயிலிருந்து முப்பது ரூபாயாக உயர்த்தித் தருவதன் மூலம் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்று தெரிகிறது. இந்த ஒரு கோடி ரூபாய் குறைந்த கூடுதல் செலவாக இருப்பதால், கோரிக்கை நியாயமானது என்று ஏற்றுக்கொண்டு, விரைவிலே அதை ஏற்றுக்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு கோடி ரூபாய் என்னும்போது அதைக் குறைந்த தொகை என்று கொள்ள முடியாது. ஆனாலுங்கூட, பிரச்சினை நியாயமானது என்ற அடிப்படையில் நாம் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுபற்றி அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது எந்த

1970 ஆகஸ்ட் 28]

ஆண்டில் ஓய்வுபெற்றவர்களுக்குக் கொடுக்கப்படலாம், எல்லாருக்குமே கொடுக்கப்படலாமா என்பதையெல்லாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்.

தொடக்க, உயர்தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு சிறப்பு ஊதியம்

* 87 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியம், தனியார் சார்பில் அமைந்த தொடக்கப் பள்ளி, உயர்தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரியர்களுக்குக் கூடுதல் சிறப்பு ஊதியம் (Special Pay) வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆசிரியர்களின் சம்பளம், படிகள் இவையாவும் குறித்து சம்பள ஆணைக்குழு ஆய்வு செய்யும்.

புலவர் பொ. பொன்னம்பலம்: சம்பள ஆணைக்குழு நிர்ணயித்திருக்கின்ற சம்பள விகிதம் எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இரண்டு நாட்களுக்கு முன்பே குறிப்பிடப்பட்டது. விரைவில் தரவேண்டுமென்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்ன தேதி என்று கூற முடியாவிட்டாலும் விரைவில் அது பற்றிய முடிவு அறிவிக்கப்படும்.

திரு. டி. மார்டின்: அநேக ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரிகிற ஆசிரியர்கள் சம்பளம் கிடைக்காத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி அடிக்கடி டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனுக்குத் தந்தி அனுப்பியும் கவனிக்கப்படவில்லை; குறிப்பாக, திருச்செந்தூர் உடன்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு 1970–71-ல் சாங்ஷன் செய்யப்பட்ட ஸ்பெஷல் டி. ஏ. இன்னும் கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. ஓட்டைப்பிடாரம் பஞ்சாயத்து யூனியனில் சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். உடன்குடி ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இது போன்று மற்றுமுள்ள பள்ளி ஆசிரியர்களுக்கும் உடனடியாகச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனுக்கு தாக்கீது அனுப்ப அரசு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கேள்விக்கு ஊராட்சித் துறை அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல முடியும். கல்வியமைச்சர் எப்படிப் பதில் கூற முடியும்?

திரு. சி. கோவிந்தராஜன்: தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சிறப்பூதியம் தருவது சம்பந்தமாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்களா? அது சம்பந்தமாக அரசாங்கம் சம்பளக் கமிஷனுக்கு சிபாரிசு செய்திருக்கிறதா?